## முதலமைச்சர் கோப்பை – 2026 போட்டிகளில் சௌராஷ்டிர கல்லூரி மாணவர்களின் சாதனை!

முதலமைச்சர் கோப்பை – 2026 கல்லூரி மாணவர்களுக்கான மதுரை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், நமது சௌராஷ்டிர கல்லூரி மாணவர்கள் சிறப்பாகப் பங்கேற்று பதக்கங்களை வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

**பளு தூக்கும் (Weightlifting) போட்டி**

மதுரை மாவட்ட அளவிலான பளு தூக்கும் போட்டியில், நமது சௌராஷ்டிர கல்லூரியின் III B.Sc. Computer Science பயிலும் மாணவர் சபரி நாதன் அவர்கள் திறம்படப் போட்டியிட்டு இரண்டாம் இடம் (வெள்ளிப் பதக்கம்) வென்று சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் சபரி சண்முகம் (III BSc., Computer Science) மற்றும் வெங்கடேஷ் (II BSc., Computer Science) ஆகியோர் 5ம் பரிசு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாள்வீச்சு (Fencing) போட்டி**

CM Trophy – 2026 Fencing போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் தீபிகா (II MCA) தர்வீன் அல்சீனா (II MCA) மற்றும் ஹரி பிரசாத் (II MA) ஆகியோர் சிறப்பாகப் போட்டியிட்டு வெள்ளிப் பதக்கம் (Silver Medal) வென்றுள்ளனர்.

**குத்துச்சண்டை (Boxing) போட்டி (47-50 கிலோ எடைப்பிரிவு)**

அதேபோல், CM Trophy – 2026 குத்துச்சண்டை போட்டியின் 47-50 கிலோ எடைப்பிரிவில், நமது சௌராஷ்டிர கல்லூரியின் **B.Sc. (கணினி அறிவியல் –** SF) பயிலும் மாணவர் **இளவரசன்** அவர்கள் சிறப்பாகப் போட்டியிட்டு **இரண்டாம் இடம் (வெள்ளிப் பதக்கம்)** வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

வெற்றி பெற்ற மாணவர்கள் தங்களது வெற்றிச் சான்றிதழ்களை கல்லூரி முதல்வரிடம் வழங்கி வாழ்த்துகளைப் பெற்றனர்.

இவ்வாறு விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கு கல்லூரி நிர்வாகம், முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

சௌராஷ்டிர கல்லூரியின் வெற்றிப் பயணம் தொடரட்டும்!